**த. நா.ச.பே. எண் : 004** **நாள் : 20.03.2020**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110**–ன்கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 20.3.2020

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**கூட்டுறவுத் துறை** சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:-

1. பல்வேறு தரப்பில் இருந்து வரும் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, மக்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு**, 3,501 நகரும் நியாய விலைக் கடைகள் 9.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும்.**
2. கூட்டுறவு நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தி, வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கி சேவையினை அளிக்கும் பொருட்டு, 95 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 6 மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள், ஒரு நகரக் கூட்டுறவு வங்கி, ஒரு நகர கூட்டுறவுக் கடன் சங்கம், ஒரு தொடக்க கூட்டுறவு பண்டக சாலை மற்றும் ஒரு பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கம் என மொத்தம் **105 கூட்டுறவு கடன் நிறுவனங்களுக்கு, 27.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.**
3. வணிக வங்கிகளுக்கு இணையாக, புதிய வசதிகளுடன் கூடிய நவீன வங்கிச் சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிட ஏதுவாக, 74 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், 10 மத்திய கூட்டுறவு வங்கிகள், 3 நகர கூட்டுறவு வங்கிகள், 7 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் ஒரு தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி என மொத்தம் 95 கூட்டுறவு நிறுவனங்கள், 14.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.
4. புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய தலைமை அலுவலகக் கட்டடங்களும், மதுரை

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டடமும், **17.87** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், மஞ்சக்குட்டை ஊராட்சி, செம்மடுவு கிராமத்தில் **15.85 கோடி ரூபாய்** மதிப்பீட்டில் மாநில அளவிலான புதிய கூட்டுறவு பயிற்சி நிலையம் அமைக்கப்படும்.
6. காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு சென்னை, தண்டையார்பேட்டையில் அந்நிறுவனத்திற்கு சொந்தமாக உள்ள இடத்தில் **5.65** கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் நகரிலுள்ள மற்றொரு இடத்தில் **4.15** கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் **2** திருமண மண்டபங்கள் கட்டப்படும்.
7. **அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள்** மக்களின் வரவேற்பினை பெரியளவில் பெற்றுள்ள நிலையில், மாநிலம் முழுவதும் **189** அங்காடிகள் கூடுதலாக துவங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**உணவுத் துறை** சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்:-

1. நெல் உலர்களன் வசதியுடனும், நவீன நெல் சேமிப்பு கொள்கலனுடனும் கூடிய **நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்** தமிழ்நாடு முழுவதும் **50 இடங்களில், 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**
2. **30** வருடங்களுக்கு மேலான, எதிர்காலத்தில் பயன்படுத்த இயலாத அளவிற்கு சேதமடைந்த கிடங்குகளை முற்றிலுமாக அகற்றி, **சென்னை IIT- யின் ஆலோசனை மற்றும் தொழில்நுட்பத்துடன்,** ஒரு லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட **புதிய நவீன சேமிப்புக் கிடங்குகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**
3. **வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில்** வேளாண் பெருமக்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினை பதப்படுத்தி சேமித்து வைத்திடும் வகையில், **75 ஆயிரம் மெட்ரிக் டன்**

**கொள்ளளவு கொண்ட நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்துடன் கூடிய நெல் சேமிப்பு கொள்கலன்கள் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு வளாகங்களில் அமைந்துள்ள சேதமடைந்த சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள், **120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக அமைக்கப்படும்.** இதன் மூலம் இவ்வளாகத்திற்கு வந்து செல்லும் கனரக வாகனங்களினால் பழுது ஏற்படாமல், கான்கிரீட் சாலைகள் நீண்ட காலத்திற்கு பயன்படும் வகையில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மீன் வளத் துறை சார்பில் பின்வரும் புதிய திட்டங்களை அறிவிக்க விரும்புகிறேன்:-

1. கன்னியாகுமரி மாவட்டம், **தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில்** முதல் கட்டமாக **கூடுதல் கட்டமைப்பு வசதிகள் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**
2. கன்னியாகுமரி மாவட்டம், **ஹெலன் நகர், ராஜாக்க மங்களம் மற்றும் கொட்டில்பாடு** ஆகிய கிராமங்களில் **39.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும்.**
3. திருவள்ளூர் மாவட்டம், **பழவேற்காடு ஏரியின் முகத்துவாரம் இயற்கை காரணங்களினால் மூடாதவாறு இருக்க, 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**
4. தூத்துக்குடி மாவட்ட மீன்பிடி துறைமுகத்தின் படகு அணையும் தளத்தினை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீட்டித்து, கூடுதல் படகுகள் நிறுத்துவதற்கு வசதி ஏற்படுத்தப்படும்.

5. ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம்–வடக்கு மற்றும் மண்டபம்–தெற்கு கிராமங்களில் 20 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும்.
6. கடலூர் மாவட்டம் **அன்னன்கோயில் மற்றும் புதுக்குப்பம்** கிராமங்களில் உள்ள **மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வசதிகள் ஏற்படுத்தி புனரமைக்கப்படும்.** மேலும், **முடசலோடை கிராமத்தில்** உள்ள **மீன் இறங்குதளம் கூடுதல் படகுகள் நிறுத்துவதற்கு ஏதுவாக 9 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் நீட்டிக்கப்படும்.**
7. காஞ்சிபுரம் மாவட்டம், புது குப்பம் மற்றும் உய்யாலி குப்பம் கிராமங்களில், 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:-

1. **1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 40 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும். மேலும், 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகவும், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகளாகவும், 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவில் கால்நடை மருத்துவமனை, 24 மணி நேரமும் செயல்படும் முதல்தர சேவைகள் வழங்கும் கால்நடை பன்முக மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படும்.**
2. கிராமப்புறங்களில் நாட்டுக்கோழி வளர்ப்பை வணிக ரீதியில் மேற்கொள்ளும் **1,925 பயனாளிகளுக்கு 50 சதவீத மானியத்தில் தலா 1,000 கோழிக் குஞ்சுகள், ஒரு மாதத்திற்கான கோழித் தீவனம் மற்றும் குஞ்சு பொரிப்பகம் அமைத்துக் கொடுக்க 14.73 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

3. விவசாயிகளின் பொருளாதார இழப்பினைத் தவிர்க்கும் வகையில், **90.35 லட்சம் கால்நடைகளுக்கு 22.03 கோடி ரூபாய் செலவில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும்.**
4. **ராணிப்பேட்டை** கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள **ஆட்டம்மை தடுப்பூசி மருந்து உற்பத்திப் பிரிவு, 18.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நல் உற்பத்தி நடைமுறைகள் (GMP) தரத்திற்கு தரம் உயர்த்தப்படும்.**
5. **தேனி மாவட்டத்தில் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்** என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே**!

உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதத்தை மேலும் உயர்த்தவும், கிராமப்புற மாணவர்கள் பயன் பெறவும், உயர் கல்வித் துறை மூலம் ஏழு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைக்கப்படும். வரும் கல்வி ஆண்டு முதல் இக்கல்லூரிகள் செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் 13.3.2020 அன்று பேரவையில், சட்டப்பேரவை விதி 110ன் கீழ், பள்ளிக் கல்வித் துறை சார்பாக வெளியிட்ட அறிவிப்புகளில், வரும் கல்வியாண்டில் **15 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 30 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும்** என்று அறிவித்திருந்தேன்.

தற்போது, **பல்வேறு** தரப்பினரிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில். ஏற்கனவே அறிவித்த 15 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கு பதிலாக. **50 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்,** மேலும் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு பதிலாக **50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், வரும் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்படும்** என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**